[2010 நவம்பர் 9

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெறுகின்ற இந்த அரசு, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலான அரசு என்பதால், கோயில்கள் கொடியவர்களின் கூடாரமாக ஆகிவிடக் கூடாது (மேசையைத் தட்டும் ஒலி) என்று தலைவர் கலைஞர் அவர்கள் திரைப்படத்தில் தீட்டிய அந்த வசனத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கடுமையாக உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்த வகையிலே இங்கே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, பல்லாயிரக்கணக்கான, கோடிக்கணக்கான மதிப்புள்ள சொத்துக்களும், நகைகளும் அங்கே இருப்பதை இந்த அரசும், துறையும் ஏற்கெனவே அறியும். தனியார் ஒரு சிலர் அந்த நிலத்தை வாங்குவதற்கு, அந்த நிருவாகப் பொறுப்பிலே இருந்த மடாதிபதிகளிடத்திலே முயற்சிகள் மேற்கொண்டார்கள் என்பதையும் கண்டறிந்து, அது தடுத்து நிறுத்தப்பட்டு, நீதிமன்றத்திலே வழக்கும் தொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களைக் காப்பாற்றுகின்ற வகையில் துறையே அதற்கான அலுவலரை நியமித்து உரிய நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

10—

தேர்வு மையம்

***62357—திரு. அருள் அன்பரசு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், பாணாவரம் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை தேர்வு மையமாக அறிவிக்க அரசு முன்வருமா?

2010 நவம்பர் 9]

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், பாணாவரம் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வு எழுத, புதிய தேர்வு மையம் அமைக்கக் கோரி, மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து கருத்துரு ஏதும் பெறப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பலமுறை நான் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை நேரிலே சந்தித்து, பாணாவரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். என்னுடைய அந்தக் கோரிக்கையை ஏற்று, அவரும் இந்தக் கல்வி ஆண்டிலே தரம் உயர்த்தித் தந்தார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல பெண்களின் முன்னேற்றத்திற்காக பல நல்ல திட்டங்களை மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்திக்கொண்டிருக்கின்ற இந்த நல்ல வேளையிலே, இந்தப் பள்ளி, தேர்வு மையமாக அறிவிக்கப்பட்டால், அங்கே படிக்கின்ற பெண்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும். அதேபோல என்னுடைய தொகுதியிலே இன்னும் இரண்டு பள்ளிகள் இருக்கின்றன. அவற்றிலே கூடலூர் அரசு மேல்நிலைப் பள்ளியைத் தேர்வு மையமாக அறிவிக்கவேண்டும். பல நல்ல திட்டங்களை பள்ளிக் கல்வித் துறை அமைச்சரவர்கள் என்னுடைய தொகுதியிலே மேற்கொண்டிருக்கின்றார்கள். அதைப்போல இதையும் இந்தக் கல்வி ஆண்டிலேயே செய்து கொடுத்தால் படிக்கின்ற மாணவர்களுக்கு பேருதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உடனடியாக அந்தப் பள்ளியை தேர்வு மையமாக அறிவிக்கவேண்டும், அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2010 நவம்பர் 9

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாணாவரம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலே இப்போது 10 ஆம் வகுப்பிலே 150 மாணவிகள் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். அது மிக மிக பிற்படுத்தப்பட்ட பகுதி என்பதை நானும் அறிவேன். அங்கே ஏற்கெனவே ஆண்கள் மேல்நிலைப் பள்ளி தேர்வு மையமாக இருக்கிறது. அங்கே சென்று அவர்கள் தேர்வு எழுதிக்கொண்டிருக்கிறார்கள். அவசியம் இந்தப் பள்ளிக்கு தேர்வு மையம் அமைக்க வேண்டுமென்ற சூழல் இருந்தால், அது குறித்த உரிய பரிந்துரைகள் மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து பெறப்படும்பட்சத்தில், இந்த ஆண்டு டிசம்பர் மாதம் இறுதி செய்யப்படுகின்றபோது, நிச்சயமாக அரசு அதைப் பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு அமைச்சருடைய பதிலுரைக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. புஷ்பராஜ்.

திரு. செ. புஷ்பராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் விக்கிரவாண்டி ஒன்றியம், தும்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பு படிக்கும் மாணவ, மாணவிகள் 500 பேர் பொதுத் தேர்வு எழுத, 15 கி.மீ. தொலைவிலுள்ள முட்டத்தூர் என்ற கிராமத்திற்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. 10 ஆம் வகுப்பு படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு தேர்வு மையம் அதே பகுதியில் உள்ளது. அங்கு கட்டட வசதியும் உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தும்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பு படிக்கும் மாணவ, மாணவிகள் அதே பள்ளியில் தேர்வு எழுத தேர்வு மையம் அமைக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தேர்வு மையம்

2010 நவம்பர் 9]

அமைப்பதைப் பொறுத்தமட்டில், கிராமப்புறமாக இருந்தால், அந்தப் பள்ளியிலே ஆண்கள் 125 பேர்கள், இருபாலர் படிக்கும் பள்ளியாக இருந்தால், 125 பேர்கள், பெண்கள் பள்ளி என்றால், 100 பேர்கள் இருக்கவேண்டுமென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. அவர் குறிப்பிடுகின்ற தும்பூர் பள்ளியிலே அரசின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கின்ற அத்தகைய விதிமுறைகளை நிறைவேற்றும்பட்சத்தில், இந்த ஆண்டு நிச்சயமாக அதை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.*

திரு. குத்தாலம் க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டம், மயிலாடுதுறை கல்வி மாவட்டம், தரங்கம்பாடியில் புனித தெரசா பெண்கள் மேல்நிலைப் பள்ளியானது, 1958 ஆம் ஆண்டு முதல் உயர்நிலைப் பள்ளியாகச் செயல்பட்டுக்கொண்டிருந்தது. நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் அமைச்சரின் பரிந்துரையோடு 2006 ஆம் ஆண்டு முதல் அது மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு, தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய, மீனவ சமுதாய மக்கள் அதிகமாகப் படிக்கக்கூடிய பள்ளியாக இருக்கிறது. அவர்கள் அருகிலே இருக்கின்ற பொறையாறுக்குச் சென்று தேர்வு எழுத வேண்டிய நிலை இருக்கிறது. சுமார் 1,600 மாணவிகள் பயிலும் இப்பள்ளியில் 12 ஆம் வகுப்பில் மாணவிகள் தேர்வு எழுதுவதற்கு அங்கேயே ஒரு தேர்வு மையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டக்கூடிய அந்தப் பகுதியில் ஏற்கெனவே அவருடைய கோரிக்கையை ஏற்று அங்கே உள்ள பள்ளி மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து இங்கே எழுப்பியிருக்கக்கூடிய கோரிக்கையும் உரிய வகையில்*

கவனிக்கப்பட்டு இந்த ஆண்டு அங்கே தேர்வு மையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. *(குறுக்கீடுகள்)*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எல்லோருமே கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அவையெல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன. ஒன்றை எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* என்னிடம் சொல்லியிருக்க வேண்டும். என்ன கேட்கப் போகிறீர்கள் என்று என்னிடம் சொல்லிவிட்டு இங்கே raise பண்ணவேண்டும். *(குறுக்கீடுகள்)* என்னிடம் சொல்லிவிட்டு raise பண்ணவேண்டும். *(குறுக்கீடுகள்)* காலையில் என்னிடம் வந்தார். என்னிடம் சொல்லியிருக்க வேண்டுமல்லவா அவர்? *(குறுக்கீடுகள்)* எனக்கு information கொடுத்துவிட்டு நீங்கள் raise பண்ணுங்கள், ஒன்றும் தவறில்லை. என்ன கேட்கப் போகிறீர்கள் என்று information கொடுத்த பிறகு, தேவையென்றால் raise பண்ணுவதற்கு நான் allow செய்கிறேன். அதைவிடுத்து காலையில் ஒன்றுமே சொல்லாமல் வந்தீர்கள், ஒன்றுமே சொல்லவில்லை. இப்பொழுது திடீர் என்று எழுந்து நின்றால் எதைக் கேட்கப்போகிறீர்கள் என்று எனக்கு எப்படித் தெரியும்? உட்காருங்கள்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட அதிகம் வசூலித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் அரசு நிர்ணயித்த கல்விக் கட்டணத்தைவிட அதிகமாக வசூலிப்பதால், பெற்றோர்கள் இடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன்,